To SEIAA 7

**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE ENVIRONMENTAL CLEARANCE FROM MINISTRY OF ENVIRONMENT, FOREST AND CLIMATE CHANGE BY TAMILNADU MINERALS LIMITED FOR THE PROPOSED BLACK GRANITE QUARRY PROJECT OF 6.73.5 Hec LOCATED AT S.F.NO. 4/2 AND 4/37, THANDRAMPATTU VILLAGE, THANDRAMPATTU TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 24.01.2019 AT 11.00 AM IN MANIAMMAL GOVINDASAMY TIRUMANA MANDABAM, NO. 2323, DAM ROAD, THANDRAMPATTU VILLAGE, THANDRAMPATTU TALUK AND TIRUVANNAMALAI DISTRICT.**

**Present :**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Thiru P. Rathinasamy | : | District Revenue Officer<br>Tiruvannamalai District<br>Tiruvannamalai |
| 2. | Thiru M. Prathap I.A.S | : | Assistant Collector (Training)<br>Tiruvannamalai District<br>Tiruvannamalai |
| 3. | Selvi. R. Umamaheswari | : | Revenue Divisional Officer<br>Tiruvannamalai District<br>Tiruvannamalai |
| 4. | Dr. M. Senthilkumar | : | District Environmental Engineer<br>Tamilnadu Pollution Control Board<br>Tiruvannamalai |
| 5. | Er. F. Akbar Sheriff | : | Assistant Engineer<br>Tamilnadu Pollution Control Board<br>Tiruvannamalai |
| 6. | Dr. S. Sugashini | : | Assistant Engineer<br>Tamilnadu Pollution Control Board<br>Tiruvannamalai |

**Project Proponent**

| | | | |
|---|---|---|---|
| 1. | Thiru E.Ganesan | : | Deputy Manager,<br>M/s Tamilnadu Minerals Ltd (Tamin)<br>Chennai |
| 2. | Thiru K.Sakthivel | : | Divisional Manager,<br>M/s. Tamilnadu Minerals Ltd (Tamin)<br>Villupuram |
| 3. | Thiru S. Ramu | : | Senior Project Manager<br>M/s Tamilnadu Minerals Ltd (Tamin)<br>Thandrampattu |

| | | |
|---|---|---|
| 4. Thiru N. Vamsi Krishna | : | EIA Consultant,<br>Hubert Enviro Care Systems (P) Ltd,<br>Chennai |
| **Public attended** | : | **65 Nos. (List Enclosed)** |

**Assistant Engineer, Tamilnadu Pollution Control Board, Tiruvannamalai**

Agenda of the programme was explained by Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai and requested the District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board to give welcome address to the gatherings.

**The District Environmental Engineer Tamilnadu Pollution Control Board, Tiruvannamalai**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai has welcomed the District Revenue Officer Tiruvannamalai, Assistant Collector (Training) Tiruvannamalai, Revenue Divisional Officer Tiruvannamalai, general publics, Environmentalist and other Government officials in the public hearing conducted on 24.1.2019 for the proposed M/s. Tamilnadu Minerals Limited, Thandrampattu Black Granite Quarry Project of 6.73.5 Hec located at S.F.No. 4/2 And 4/37, Thandrampattu Village, Thandrampattu Taluk, Tiruvannamalai District.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai has emphasised that as per the Ministry of Environment and Forest, in Environment Impact Assessment Notification dated 14.09.2006, it is necessary to conduct public hearing for the projects above 5 hectares covered in schedule of the said Notification as specified therein and the views & suggestions of the public's & Environmentalist will be recorded and send to State Level Environmental Impact Assessment Authority.

Further, the District Environmental Engineer has stated that the public Notice for the public hearing proposed to be conducted on 24.1.2019 for the Thandrampattu Black Granite Quarry Project of 6.73.5 Hec located at S.F.No. 4/2 and 4/37, Thandrampattu Village, Thandrampattu Taluk, Tiruvannamalai District at Maniammal Govindasamy Tirumana mandabam, Thandrampattu Village, Thandrampattu Taluk, Tiruvannamalai District was published in the English (Indian Express) and Tamil Newspapers (Dinamani) on 20.12.2018 with the approval obtained from the District Collector & based on that, the public hearing has been conducting today i.e on 24.1.2019.

Further, the District environmental Engineer has stated that, the project proponent will explain about their proposed project and Environmental Impact Assessment report through power point presentation and followed with the public can express their views,

suggestions and comments on the said project. Also he stated that the queries of the public's will be clarified by the project proponent.

In the continuation of the public hearing, the District Environmental Engineer has requested the District Revenue officer, Tiruvannamalai to address few words to the gatherings.

**The District Revenue Officer, Tiruvannamalai :**

The District Revenue Officer has welcomed the gatherings in the public hearing meeting. The District Revenue Officer has emphasized that the public Notice was published in the English (Indian Express) and Tamil Newspapers (Dinamani) on 20.12.2018 with the approval obtained from the District Collector for the public hearing proposed to be conducted on 24.1.2019 for the Thandrampattu Black Granite Quarry Project at Maniammal Govindasamy Tirumana mandabam, Thandrampattu Village, Thandrampattu Taluk, Tiruvannamalai District and based on that, the public hearing has been conducting today i.e on 24.1.2019.

Also the District Revenue officer requested the public's to give their opinion/ suggestions in oral/written statement and has also stated that the opinions & suggestions of the public's & Environmentalist will be recorded and send to State Level Environmental Impact Assessment Authority, Tamilnadu.

**The Assistant Engineer, TNPC Board, Tiruvannamalai**

Assistant Engineer, Tamilnadu pollution control Board has requested the representative of M/s TAMIN to explain about their proposed project and Environmental Impact Assessment report through Power Point Presentation to the public gathered in the public hearing.

In continuation to that Mr. E.Ganesan, Deputy Manager M/s Tamilnadu Minerals Ltd (Tamin), Thandrampattu has presented the details of the project and EIA report and the proposed Environmental Management Plans through power point presentation.

**The Assistant Engineer, TNPC Board, Tiruvannamalai**

Assistant Engineer, TNPCB has requested the public to raise their questions one by one after giving their name and address by oral/written statement.

Accordingly the following village people have raised some comments and questions in the public hearing and necessary reply have been given by above said Officials are mentioned below.

**Question No.1: Thiru. Balaji, Nayakkanur village.**

He questioned that there will be any advantage to their village on opening of the said project and he requested to provide any employment opportunity to their village people.

**Answer: Thiru .E.Ganesan, Deputy Manager(Mining lease), TamilNadu Minerals Ltd., Chennai.**

He answered that there will be a possibility of creating indirect employment for qualified persons after the commencement of the project.

**Question No.2: Mr. K. S. Mayilvaganam, Farmer, Thandarampet Village.**

He questioned that whether the project Proponents will provide basic facilities for their area?

**Answer: Thiru .E.Ganesan, Deputy Manager(Mining lease), TamilNadu Minerals Ltd., Chennai.**

He answered that, after discussion with the District Administration the necessary needs will be provided

**Answer: Assistant Collector (Training)**

Meanwhile, the Assistant Collector (Training) has explained about the District Mineral Foundation which is the foundation collecting part of the royalty paid in term of second schedule to the sub sections (5) and (6) of 9B of the Mines and Minerals (Development and Regulation) Act, 1957 (67 of 1957) from the project proponents and that fund will be utilized for the development of the respective villages. Also he ensured that at present Rs. 3 crores of the funds are available in the account of the District Mineral Foundation Trust Fund. The above said fund will be distributed to concerned villages for fulfilling of basic facilities.

**Question No.3: Thiru.K. Palanisamy, Thandarampet Village**

He stated that due to the transportation of over loading of the black granite blocks, the village roads are getting damaged and he raised the question that Is there any arrangements will make by the project proponent to reform the damaged roads? and also he requested to provide any employment opportunity to their village people

**Answer: Thiru .E.Ganesan, Deputy Manager(Mining lease), TamilNadu Minerals Ltd., Chennai.**

He answered that the above said issues will be rectified by the District Administration through District Mineral Foundation Funds and he assured that there is a possibility of creating indirect employment for qualified persons after commencement of the project.

**Question No.4: Thiru Nagarajan, Thandarampet.**

He stated that there are 500 families residing in their village and questioned that is there any possibility of employment for them?

**Answer: Thiru .E.Ganesan, Deputy Manager(Mining lease), TamilNadu Minerals Ltd., Chennai.**

He answered that it is a small scale project located in that area, which will provide indirect employment to qualified individuals.

**Question No.5: Thiru. M. Sathish Kumar, Thandarampet.**

He stated that, advertisement was published through News Papers like Indian Express and Dinamani and those papers aren't read in their area. So their peoples aren't have awareness for this type of advertisement. He instead suggested that, pubilicity of the public hearing may be given through bit notice in their area with help of the panchayat concerned.

Further he raised the doubt that, due to the commencement of said project is there any effects of level and contamination in the ground water. Also he requested to provide the water which generated during the quarrying activity for irrigation purpose to the nearby farmers and villages

**Answer: The District Environmental Engineer TNPCB, Tiruvannamalai**

He replied that as per the Ministry of Environment and Forest, in Environment Impact Assessment Notification dated 14.09.2006, the public notification was published in the English and Tamil Newspapers. Also he stated that the Bit notice regarding public hearing was already issued to the concerned villages through Village Administrative Officers.

**Answer: Thiru .E.Ganesan, Deputy Manager(Mining lease), TamilNadu Minerals Ltd., Chennai.**

He clarified that due to the commencement of quarrying activity, there will not be any contamination in the ground water as well ground water level won't be change. He further answered that the water/rain water collected in the quarry pit will be provided for irrigation purpose.

**Question No.6: Thiru. Panneerselvam, Thandarampet.**

He stated that already a sum of Rs. 45 lakhs was allotted by District Administration for their village to their basic needs and school developments but so far they have received part amount only. He requested to provide the remaining amount for the said purpose. He also requested to build a Marriage hall by M/s. Tamilnadu Mineral Limited (TAMIN) from CSR fund.

**Answer: The Asst Collector ( Training ), Tiruvannamalai :**

He replied that the remaining fund will be released to the concerned Panchayat within 10 to 15 days after the approval of District Collector.

**Question No.7: Thiru. N.Chinnapayan , Thandarampet.**

He raised the question that the project proponent will provide basic facilities for their area?

**Answer: Thiru .E.Ganesan, Deputy Manager (Mining lease), TamilNadu Minerals Ltd., Chennai.**

He answered that, after discussion with the District Administration the necessary needs will be provided

**Question No.8: Thiru. G. Karthik , Sathanur Village .**

He stated that there will be huge noise generated during the blasting of rocks and it will affects the nearby people and raised the doubt that any alternate methods is there to rectify noise pollution arising during such quarrying activities.

**Answer: Thiru .E.Ganesan, Deputy Manager (Mining lease), TamilNadu Minerals Ltd., Chennai.**

He replied that the calcium hydrochloride is used for blasting of rocks to avoid noise pollution and also a technique called wire saw cutting method will be used for quarrying huge size rocks. Also he stated that the granites rocks should be cut in the cake shape to avoid wastage and hence Non Electrical Detonator/Milli second delay Detonator will be used for the cutting the granites, which generates less noise.

**Question No.9: Tmt. Meenakshi, Nayakkanur Village .**

She questioned that Will you provide any employment to my husband ?

**Answer: Thiru .E.Ganesan, Deputy Manager (Mining lease), TamilNadu Minerals Ltd., Chennai.**

He answered that it is a small scale project located in that area, which will provide indirect employment to qualified individuals.

**Question No.10: Thiru. Srinivasan, Thandrampattu Village .**

He stated that he has noticed that there is no plantation in the quarry area and raised the question that Will you implement the green belt development work in the project area?

**Answer: Thiru .E.Ganesan, Deputy Manager (Mining lease), TamilNadu Minerals Ltd., Chennai.**

He answered that they have already implemented green belt development in that area and also they will continue to develop green belt in the lease hold area.

**No written Petitions received in this Public Hearing meeting**

The entire public hearing process was ended with the vote of thanks by Assistant Engineer, Tamilnadu Pollution Control Board, Tiruvannamalai.

**Enclosures :**

1. Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 20.12.2018) for notifying the public hearing meeting.
2. Bit notice distributed to the public's of nearby villages through VAO
3. Copy of attendance sheet at the public hearing (Total pages 8 & 65 persons)
4. Copy of Audio & Video (DVD – Disc 1 ) of the public hearing proceedings.
5. Copy of photographs of the public hearing proceedings
6. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, Project Report submitted by the Project Proponent.

29/1/2019

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Tiruvannamalai.

29.1.19

District Revenue Officer
Tiruvannamalai.

3/3

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தண்டராம்பட்டு கிராமம், சர்வே எண். 4/2 மற்றும் 4/37 –ல் 6.73.5 ஹெக்டர் பரப்பளவில் தி/எ். தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் வெட்டி எடுக்கப்படவுள்ள, 6.73.5 ஹெக்டர் பரப்பளவு கொண்ட கருப்பு கிரானைட் குவாரி நடத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கும் பொருட்டு மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் 24.01.2019 அன்று தண்டராம்பட்டில் அமைந்துள்ள தி/எ். மணியம்மாள் கோவிந்தசாமி திருமண மண்டபத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட நடவடிக்கை விபரங்கள்.

முன்னிலை

1. திரு. பொ. இரத்தினசாமி, : மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவண்ணாமலை மாவட்டம்,
திருவண்ணாமலை.

2. திரு. மு. பிரதாப் இ.ஆ.ப., : உதவி ஆட்சியர் (பயிற்சி),
திருவண்ணாமலை.

3. செல்வி. இரா. உமாமகேஸ்வரி : வருவாய் கோட்டாட்சியர்
திருவண்ணாமலை

4. முனைவர். மு. செந்தில்குமார், : மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை.

5. திரு.ப. அக்பர் ஷெரிப் : உதவி பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை.

6. முனைவர். சி. சுகாஷினி : உதவி பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை.

<u>திட்ட பிரதிநிதி</u>

| | |
|---|---|
| 1. திரு. E. கணேசன் | : துணை மேலாளர், திரு/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம் சென்னை. |
| 2. திரு K.சக்திவேல் | : கோட்ட மேலாளர், திரு/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம் விழுப்புரம். |
| 3. திரு. S. ராமு | : முதுநிலை திட்ட அலுவலர், திரு/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம் தண்டராம்பட்டு. |
| 4. திரு. N. வம்சிகிருஷ்ணா | : சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர், திரு/ள். ஹியூபர்ட் என்விரோ கேர் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடேட், சென்னை. |

கலந்துகொண்ட பொதுமக்கள் - 65 பேர் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

<u>உதவி பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை</u>

நிகழ்ச்சி நிரல் தொடங்கி வைத்து வரவேற்புரை வழங்க மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்களை அன்புடன் அழைத்தார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை</u>

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அனைவருக்கும் தனது காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தண்டராம்பட்டு கிராமம், சர்வே எண். 4/2 மற்றும் 4/37 –ல் 6.73.5 பரப்பளவில் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் 6.73.5 ஹெக்டர் பரப்பளவில் வெட்டி எடுக்கப்படவுள்ள கருப்பு கிரானைட் குவாரி நடத்த மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையம், சென்னை அவர்களிடம் சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், உதவி ஆட்சியர் (பயிற்சி) அவர்களையும், வருவாய் கோட்டாட்சியர் அவர்களையும், பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வருக வருக என வரவேற்றார்.

மேலும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் தனது உரையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ன் படி 5 ஹெக்டர் பரப்பளவிற்கு, மேலுள்ள கருப்பு கிரானைட் குவாரிகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமுகநல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து முலமாகவோ, வாய் மொழி முலமாகவோ பதிவு செய்யப்பட்டு அதனை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு அனுப்புவது விதியாகும் என தெரிவித்தார்.

இது தொடர்பாக பொது அறிவிப்பு கடந்த 20.12.2018 அன்று திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தண்டராம்பட்டு கிராமம், சர்வே எண். 4/2 மற்றும் 4/37 –ல் 6.73.5 பரப்பளவில் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் 6.73.5 ஹெக்டர் பரப்பளவில் வெட்டி எடுக்கப்படவுள்ள கருப்பு கிரானைட் குவாரிக்கு 24.01.2019 தேதியன்று பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் தி/ள். மணியம்மாள் கோவிந்தசாமி திருமண மண்டபத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெறுமென இந்தியன்

எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணி செய்தித்தாளில் வெளியிடப்பட்டது என்பதையும் தெரிவித்து அதன்படி இன்று 24.01.2019 தேதியன்று பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றுகொண்டிருக்கிறது என தெரிவித்தார்.

மேலும் இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு நிழற்படம் மூலம் விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று தெரிவித்தார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கேள்விகள் கேட்கும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கேள்விகளை கேட்கலாம் என்று தெரிவித்தார்.

பின்னர் இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை தாங்கிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை உரை ஆற்ற மேடைக்கு அழைத்தார்.

<u>மாவட்ட வருவாய் அலுவலர்</u>

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் அனைத்து அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர் அனைவருக்கும் காலை வணக்கத்தை தெரிவித்துக்கொண்டார். திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தண்டராம்பட்டு கிராமம், சர்வே எண். 4/2 மற்றும் 4/37 (ப) தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் வெட்டி எடுக்கப்படவுள்ள 6.73.5 ஹெக்டர் பரப்பளவு கொண்ட கருப்பு கிரானைட் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பாக பொது அறிவிப்பு கடந்த 20.12.2018 அன்று மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் தி/ள். மணியம்மாள் கோவிந்தசாமி திருமண மண்டபத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெறுமென இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணி செய்தித்தாளில் வெளியிடப்பட்டது என்பதையும் தெரிவித்து அதன்படி இன்று

24.01.2019 தேதியன்று பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றுகொண்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் தங்களது ஆதரவு அல்லது ஆட்சேபணைகளை தெளிவாக கொடுக்கும் படி கேட்டுக்கொண்டார். தாங்கள் கேட்கும் கேள்விகள் மற்றும் தொழிற்சாலை நிர்வாகத்தினர் அளிக்கும் பதில்கள் ஆகியவை பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையம், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவித்தார்.

**நிறுவனத்தினர் :**

தொழிற்சாலை நிர்வாகத்தினர் நிழற்படம் மூலம் நிறுவ இருக்கும் கருப்பு கிரானைட் குவாரியை குறித்து விரிவாக எடுத்துரைத்தார்கள்.

**உதவி பொறியாளர்:**

தற்போது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள், யோசனைகள், விளக்கங்கள் மற்றும் வினாக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கேள்விகள் கேட்கும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கேள்விகளை கேட்கலாம் என்று தெரிவித்தார்

**பொதுமக்கள் கருத்துகேட்பு :**

**கேள்வி.எண்.1 திரு.என். பாலாஜி, நாயக்கனூர் கிராமம்.**

இந்த குவாரியை தொடங்குவதால் அவர்களது கிராமங்களில் ஏற்படும் நன்மைகள் என்ன என்றும் மற்றும் போதிய வேலைவாய்ப்பு வழங்கப்படுமா என்றும் வினா எழுப்பினார்.

பதில். திரு கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு கனிம நிறுவனம். இந்த குவாரி தொடங்கிய பின்னர் தகுதியுள்ள நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கித்தர வாய்ப்புள்ளது என தெரிவித்தார்.

கேள்வி. எண்.2 திரு கே.எஸ். மயில்வாகனம், விவசாயி, தண்டராம்பட்டு கிராமம் : எங்கள் பகுதிக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தருவீர்களா? என வினா எழுப்பினார்.

பதில். திரு கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு கனிம நிறுவனம் மாவட்ட நிர்வாகத்துடன் கலந்தாய்வு செய்து தேவையான வசதிகள் செய்து தரப்படும்.

இதற்கிடையில் மாவட்ட ஆட்சியர் (பயிற்சி) அவர்கள் மாவட்ட கனிம அறக்கட்டளை பற்றி கீழ்கண்டவாறு விளக்கினார்: உட்பிரிவு (5) & (6) சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள்(அபிவிருத்தி மற்றும் சீர்திருத்த) சட்டம், 1957 (67/1957) கீழ் கற்றுண்டங்களுக்கு செலுத்தப்படும் உரிமைத்தொகையில் பகுதி தொகையை மாவட்ட கனிம அறக்கட்டளைக்கு நிதியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார். இந்த நிதியை பயன்படுத்தி மாவட்ட நிர்வாகம் உரிய கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து வருகிறது என்றும் தெரிவித்தார். மேலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் கனிம அறக்கட்டளை நிதியாக ருபாய் மூன்று கோடி இருப்பில் உள்ளது என்றும் இதனை மாவட்ட ஆட்சியர் தலைமையில் உரிய கிராமத்திற்கு அடிப்படை வசதிகள் நிறைவேற்றித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார்.

கேள்வி. எண்.3 திரு கே. பழனிச்சாமி, தண்டராம்பட்டு கிராமம் : அதிக பாரம் உள்ள கிரானைட் கற்றுண்டங்களை லாரிகளில் ஏற்றிச்செல்வதால் சாலைகள் பழுதடைந்துவருகிறது என்றும் அதனை சரிசெய்து தர வேண்டுமென்றும் மேலும் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்

15

பதில். திரு கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு கனிம நிறுவனம் : மாவட்ட கனிம அறக்கட்டளை நிதிமூலம் உரிய கிராமத்திற்கு சாலை சீரமைப்பு செய்துதரப்படும் என்றும் ஏற்கனவே தெரிவித்தப்படி மறைமுக வேலைவாய்ப்பு செய்து தரப்படும் என்றும் தெரிவித்தார்.

கேள்வி. எண்.4 திரு நாகராஜன், தண்டராம்பட்டு கிராமம்: எங்கள் கிராமத்தில் 500 ஏழைக்குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமா என்று கேட்டார்.

பதில். திரு கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு கனிம நிறுவனம்: இப்பகுதியில் அமைந்துள்ள இக்குவாரி சிறிய அளவிலான திட்டம் என்பதனால் தகுதிவாய்ந்த நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு அந்தந்த நேரத்தில் வழங்கப்படும் என தெரிவித்தார்.

கேள்வி. எண்.5 திரு எம். சதீஷ்குமார், தண்டராம்பட்டு கிராமம் இந்தக்கூட்டம் நடத்தப்படுவதற்காக வெளியிட்ட விளம்பரம் ஆங்கில நாளேடு இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளேடு தினமணியிலும் விளம்பரம் செய்துள்ளீர்கள். ஆனால் இந்த நாளேடுகள் எங்கள் பகுதியில் அதிகம் எவரும் படிப்பதில்லை என்றும் இதனால் பொதுக்களிடம் போதுமான அளவு விழிப்புணர்வு ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார். பஞ்சாயத்து உதவியுடன் துண்டு பிரசுரம் வினியோகம் செய்திருந்தால் அதிகப்படியான மக்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்புள்ளது என்றும் கூறினார். இந்த சுரங்கத்தின் இயக்கத்தால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது என்றும் சுரங்கம் வெட்டி எடுக்கும்போது கிடைக்கும் நீரை விவசாயத்திற்கு பயன்படுத்த வழி வகுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

பதில். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவண்ணாமலை அவர்கள்: சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை விதிகளின்படி ஒரு ஆங்கில நாளேடு மற்றும் ஒரு தமிழ் நாளேட்டில் விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்பதனால் மேற்படி நாளேடுகளில்

விளம்பரம் செய்யப்பட்டது மேலும் கிராம நிர்வாக அலுவலர் மூலம் துண்டு பிரசுரமும் விநியோகம் செய்யப்பட்டது என்று தெரிவித்தார்.

பதில். திரு கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு கனிம நிறுவனம்: நிலத்தடி நீர் பாதிக்காத வண்ணம் சுரங்கம் வெட்டி எடுக்கப்படும் எனவும் சுரங்கம் தோண்டும்பொழுதும் மற்றும் சுரங்கத்தில் மழை காலங்களில் தேங்கும் நீரை சேகரித்து அதனை உரிய முறையில் அருகே உள்ள நிலங்களுக்கு விவசாய பயன்பாட்டிற்கு வழங்க வசதி செய்துதரப்படும் என தெரிவித்தார்.

கேள்வி.எண். 6 திரு பன்னீர்செல்வம், தண்டராம்பட்டு கிராமம் : மாவட்ட அறக்கட்டளை நிதியிலிருந்து ரூபாய் 45 லட்சம் பஞ்சாயத்து நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பகுதி தொகை மட்டுமே கிடைக்கப்பெற்றது, மீதம் உள்ள தொகை எப்பொழுது கிடைக்கும் எனவும் மேலும் எங்கள் பகுதிக்கு திருமண மண்டபம் கட்டித்தர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பதில். உதவி ஆட்சியர் (பயிற்சி) அவர்கள்: மீதித்தொகை அரசு ஒப்புதல் பெற்று பத்து அல்லது பதினைந்து நாட்களுக்குள் கிடைக்க வாய்ப்புள்ளது, என்று பதிலளித்தார்.

கேள்வி.எண். 7 திரு எம். சின்னப்பையன், தண்டராம்பட்டு கிராமம்: எங்கள் பகுதிக்கு அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பதில். திரு கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு கனிம நிறுவனம்: மேற்கூறியது போல மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி மூலம் மாவட்ட நிர்வாகத்தின் ஆலோசனை உடன் அடிப்படை வசதிகள் செய்துதரப்படும் என்று தெரிவித்தார்.

கேள்வி.எண். 8 திரு ஜி. கார்த்திக், சாத்தனூர் கிராமம்: வெடி சத்தத்தினால் அருகிலுள்ள மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதை தடுக்க என்ன நடவடிக்கை மேற்கொள்வீர்கள் என்று கேட்டார்.

பதில். திரு கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு கனிம நிறுவனம்: வெடி வைப்பது சம்மந்தமாக பழைய முறைகளை தவிர்த்து புதிய முறையில் கால்சியம் ஹைட்ரோகுளோரைடை பயன்படுத்த உள்ளதாகவும் அதனால் அதிகபடியான சப்தம் ஏற்பட வாய்ப்பில்லை எனவும் கூறினார். மேலும் கல் அறுவை இயந்திரம் (Wire saw cutting machine) மூலம் வெட்டி எடுப்பதனாலும் அதிகம் சப்தம் ஏற்படவாய்ப்பு இல்லை என்று கூறினார். மேலும், கிரானைட் பாறைகள் மெல்லிய அகன்ற துண்டுகள் போல் வெட்டி எடுக்கப்பட வேண்டியுள்ளதால் Non Electrical Detonator /Milli Second Delay Detonator மூலம் வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை அதிக சப்தம் இல்லாமல் வெட்டி எடுக்கப்படும். உரிய பாதுகாப்புடனே மேற்கூறியவாறு கிரானைட் துண்டங்கள் வெட்டி எடுக்கப்படும் என தெரிவித்தார்.

கேள்வி.எண். 9 திருமதி. மீனாட்சி, நாயக்கனூர் கிராமம்: தனது கணவருக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பதில். திரு கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு கனிம நிறுவனம் தகுதி வாய்ந்தவர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு வழங்கப்படும் என தெரிவித்தார்.

கேள்வி. எண். 10. திரு ஜி. சீனுவாசன், தண்டராம்பட்டு கிராமம் : குவாரியில் பசுமைக்காக மரக்கன்றுகள் குவாரியை சுற்றி அமைக்கப்படுமா என்று கேட்டார்.

பதில். திரு கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு கனிம நிறுவனம் சுரங்க எல்லையை சுற்றி மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளது. மேலும் தேவையான இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு குவாரியை சுற்றிலும் பசுமை வளையம் ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்த பொதுமக்களால் எந்த எழுத்து மூலமான கருத்துக்களும் பெறப்படவில்லை.

பொதுமக்கள் எவரும் மேற்கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க முன்வராததால் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்ட நடவடிக்கை நிறைவுசெய்யப்பட்டது.

இது தவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

1) பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள் 20.12.2018)
2) பொது அறிவிப்பு துண்டுபிரச்சுரம் மூலம் அருகில் உள்ள கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் வழங்கப்பட்ட நகல்.
3) பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு நகல் 8 பக்கங்கள், 65 நபர்கள்)
4) பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல் (DVD)
5) பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம்
6) திட்ட நிறுவனத்தாரால் சமர்ப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஆகியவற்றின் நகல்கள் (Hard and Soft Copies)

29/01/2019
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்,
திருவண்ணாமலை.

மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவண்ணாமலை.

2/3